மலேசியத் தமிழ் ஆய்விதழ்

MALAYSIAN JOURNAL OF TAMIL

தொகுதி 2 (பகுதி 2)

Volume 2 (Issue 2)

திசம்பர் 2024 / December 2024

வெளியீடு:
மலேசியத் தமிழ்க்கல்வியாளர் மகிழ்மன்றம்

Published by:
Malaysian Tamil Academics Appreciative Association

eISSN 2990-9694

Malaysian Journal of Tamil

மலேசியத் தமிழ் ஆய்விதழ்

Website: http://kpatmalaysia.com/ojs/index.php/mjt/index

eISSN:

2990-9694

Publisher:

Malaysian Tamil Academics Appreciative Club

No. 64, Fasa 2, Taman Kenanga, 33000 Kuala Kangsar, Perak, Malaysia
016-8956014
kpat.malaysia@gmail.com

வெளியீடு:

மலேசியத் தமிழ்க்கல்வியாளர் மகிழ்மன்றம்

The publisher of Malaysian Journal of Tamil will not be responsible for the statement made by the authors in any articles published in the journal. Under no circumstances will the publisher of this publication be a liable for the loss or damage cost by your reliance on the advice, opinion or information obtained either explicitly or implied through the contents of this publication.

©Malaysian Tamil Academics Appreciative Association. All rights reserved. No part of this journal may be reproduced in any forms or by any means without publisher's prior permission.

eISSN 2990-9694

9 772990 969001

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

திருக்குறள்களில் 'உம்' இடைச்சொல்லின் பொருள் பயன்பாடு – ஓர் ஆய்வு

A Study on The Usage of 'Um' Particle's Defining Functions in Tirukkuṟaḷ

Seeniwasan Sandran / சீனிவாசன் சந்திரன்[1]
Manonmani Devi M.A.R Annamalai / மனோன்மனி தேவி அண்ணாமலை[2*]

[1]Postgraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia.
[2]Associate Professor, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia.

*Corresponding Author's Email: manonmanidevi@fbk.upsi.edu.my

ஆய்வுச் சுருக்கம்

திருக்குறளில் சேர்ந்து வரும் 'உம்' இடைச்சொல் உணர்த்தும் பொருளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். தனித்துச் செயற்படும் தன்மை இல்லாமல், பெயரையும் வினையும் இடமாகக் கொண்டு பொருள் தெளிவைக் காட்டுவது இடைச்சொல்லாகும். இடைச்சொற்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும், அவை எல்லாச் சொற்களோடும் பெருவழக்கில் வழங்குகின்றன. இடைச்சொல்லில் தத்தம் பொருளுடன் வந்து குறிப்பால் பொருளுணர்த்தும் தனியிடைச் சொற்களும் உண்டு. தனியிடைச் சொற்களில் 'உம்' இடைச்சொல்லின் பயன்பாடு இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகிறது. அவ்வகையில், திருவள்ளுவர் தமது குறட்பாக்களில் பல்லிடங்களில் உம் இடைச்சொல்லைப் பயன்படுத்திக் குறிப்பால் பொருளை உணர்த்துகிறார். இது, கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை ஆகிய மூன்று அதிகாரங்களின் முப்பது குறள்களும் ஆய்வுப் பொருளாகத் தெரிவு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பண்புசார் ஆய்வாகும். முப்பது குறள்களில் உம் இடைச்சொல்லை ஏற்று வந்துள்ள எட்டுக் குறள்களில் ஆறு முற்றுப்பொருளிலும் இதர இரண்டில் சிறப்பும்மைப் பொருளிலும் (உயர்வுச் சிறப்பு) வருவதாக ஆய்வு முடிவில் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாய்வு, திருக்குறளில் பயின்று வரும் உம் இடைச்சொல்லின் பொருளை அறிந்து கொள்ள வகை செய்கிறது.

கருச்சொல்: திருக்குறள், உம், இடைச்சொல், பொருள்

Abstract

Tamil grammar considers particles to be an integral part of every word, regardless of their frequency. These particles play a crucial role in defining the meanings of words, depending on the nouns and verbs used. The 'um' particle, in particular, has been extensively used in Tamil literature, with Thiruvalluvar employing it in his Thirukural to define specific meanings of words. This study aims to delve deeper into the usage of the 'um' particle's defining functions in Tirukural. The study focuses on three chapters of Tirukkuṟaḷ, namely Kaṭavuḷ vāḻttu, Vāṉ ciṟappu, and Nīttār perumai, comprising a total of 30 Kuṟaṭpākkaḷ. The results indicate that the 'um' particle's defining functions have been employed in 8 Kuṟaṭpākkaḷ out of 30, with 6 Kuṟaṭpākkaḷ having Muṟṟup poruḷ , and the other 2 Kuṟaṭpākkaḷ having Ciṟappum'mai poruḷ(Uyarvu Ciṟappu). This qualitative study provides insights into the defining functions of the 'um' particle in Tirukkuṟaḷ.

Keywords: Tirukkuṟaḷ, 'um', particle, defining functions

முன்னுரை

தமிழ்மொழியில் இலக்கணப் பயன்பாடு கருதி, வகைப்படுத்தப்பட்ட நான்கு சொற்களில் இடைச்சொல்லும் ஒன்றாகும். இடை என்றால் இடம் என்னும் பொருளுண்டு. ஒரு பெயர் அல்லது வினையின் அகத்திலோ புறத்திலோ இடங்கொண்டு பொருள் உணர்த்துவது இடைச்சொல்லாகும் (ராஜகோபாலாச்சாரியார், 1962). பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் முதல், இடை, கடை என்னும் மூன்று நிலைகளில் நின்று பொருள் தெளிவைக் காட்டுவதாக இடைச்சொல் செயற்படுகிறது(சீனி நைனா முகம்மது, 2013). இடைசொல், தனித்து நின்று பொருள் தர இயலாத் தன்மையைக் கொண்டுள்ளது. இடைச்சொற்களில் குறிப்பால் தத்தம் பொருள் உணர்த்தும் தனியிடைச் சொற்களும் உண்டு. அவை, உம், ஓ, ஏ, மற்று, மன், கொல் எனவாகக் கொள்ளப்படுகின்றன. இவற்றுள் ‘உம்’ இடைச்சொல், ஒரு வாக்கியத்தில் பெயருக்கு அடையாக வரும் சொற்கள், முற்றுவினைகள் நீங்கலாக இதர சொற்களுடன் இணைந்து வெவ்வேறு பொருளைத் தருகின்றது (நுஃமான், 1999). அவ்வகையில், திருவள்ளுவரின் குறட்பாவில் பல்லிடங்களில் உம் இடைச்சொல்லின் பொருள் பயன்பாட்டைக் காண இயலுகின்றது. இந்நிலையில், திருக்குறள்களில் வரும் ‘உம்’ இடைச்சொல் உணர்த்தும் பொருள் பயன்பாட்டை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

உம் இடைச்சொல்

சொற்களில் சேர்ந்து வரும் உம் என்னும் இடைச்சொல் எட்டுப் பொருளில் வருவதாக,

> **“எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை**
>
> **முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கம் என்று**
>
> **அப்பால் எட்டே உம்மைச் சொல்லே”**
>
> **(தொல்காப்பியம் - சொல்லியல் - இடையியல்)**

என்னும் நூற்பா வழி தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். அவை எச்சம்(இறந்தது/ எதிரது தழுவிய எச்சம்), சிறப்பு(உயர்வுச் சிறப்பு/ இழிவுச் சிறப்பு), ஐயம், எதிர்மறை, முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் என்பன ஆகும். இவற்றுக்கிடையே தமக்கேயுரிய பொருள் வேறுபாடு உண்டு.

ஆய்விலக்கிய மீள்நோக்கு

திருக்குறளில் இடைச்சொல் பயின்று வரும் முறை குறித்து ஆய்வுகள் சில மேற்கொள்ளப்பட்டுள்ளன. சு. சரவணன் (2015), ‘திருக்குறளில் தன்மை விகுதிகள் – மொழியியல் பார்வை’ என்கிற ஆய்வில், தன்மை ஒருமை, பன்மை வினைமுற்று விகுதிகள் தொல்காப்பிய நூற்பாவின் அடிப்படையில் எவ்வாறு ஒத்தும் முரண்பட்டும் அமைகின்றன என்பதை ஆராய்ந்துள்ளார். அடுத்து, நவீன் கணேசன், சரண் சுக்லாம் ஆத்மலிங்கம்(2023), ‘திருக்குறளில் இடம்பெறும் ஒடு, ஓடு உருபின் பயன்பாடு’ ஆய்வில், குறளில் ஒடு, ஓடு உருபு அமையும் முறையையும் அவற்றுள் எவை உடனிகழ்ச்சிப் பொருளைக் கொண்டிருப்பதை ஆய்ந்துள்ளனர். மேலும், தி.தர்மலிங்கம்(2023), ‘திருக்குறளில் புதிய உவம உருபுகள்’ என்னும் ஆய்வில், தொல்காப்பியர் குறிப்பிட்ட 36 உவம உருபுகள் தவிர்த்து உள்ள பிற உவமவுருபுகள் திருக்குறளில் இடம்பெற்றுள்ளதா என்பதை ஆய்ந்துள்ளார். மேற்சுட்டிய ஆய்வுகள் திருக்குறளில் விகுதிகள், வேற்றுமை உருபு, உவமவுருபுகள் ஆராய்தலை நோக்கமாகக் கொண்டதாகும். ஆகவே, ஆய்வாளரின் இவ்வாய்வு முன்னாய்வுகளோடு வேறுபடுகின்றது.

ஆய்வு நெறிமுறை

இஃது ஓர் பண்புசார் முறையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகும். இவ்வாய்வுக்குத் திருக்குறளின் கடவுள் வாழ்த்தும் வான்சிறப்பும் நீத்தார் பெருமையும் ஆகிய மூன்றதிகாரங்கள் உட்படுத்தப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்டுள்ள முதல் மூன்று அதிகாரங்களில் 8 குறள்கள் மட்டும் உம் இடைச்சொல்லை ஏற்று வந்துள்ளன. ஆகவே, இவற்றுள் பயின்று வரும் உம் இடைச்சொல்லின் பொருளினை மட்டுமே இவ்வாய்வு ஆராய்ந்துள்ளது.

ஆய்வுக் கண்டுபிடிப்பு

அ) வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்

கியாண்டு மிடும்பை இல. (குறள் 4)

யாண்டும் = யாண்டு + உம் (முற்றும்மை) + இடும்பை

யாண்டு = எக்காலம்

விளக்கம்: யாண்டும் என்றால் எக்காலமும் எனப் பொருட்படும். இது முக்காலத்தையும் உள்ளடக்கி உள்ளது.

ஆ) இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்

பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (குறள் 5)

இருவினையும் = இரு+ வினை + உம் (முற்றும்மை) + சேரா

விளக்கம்: இங்கு இருவினை என்பது நல்வினையையும் தீவினையையும் உள்ளடக்கி உள்ளது.

இ) நெடுங்கடலுந் தன்நீர்மை குன்றுந் தடிந்தெழிலி

தானல்கா தாகி விடின். (குறள் 17)

கடலும் = கடல் + உம் (உயர்வுச் சிறப்பு) + தன்நீர்மை

விளக்கம்: கடலிலிருந்து எடுத்த நீரை மேகமானது திரும்ப மழையாகப் பெய்யாவிடில் வளமிக்க கடலும் குன்றும் என்பதால், இதிலுள்ள உம், கடலுடைய வளத்தின் சிறப்பை அழுத்திக்கூறி உயர்த்தியதால் இஃது உயர்வுச்சிறப்பு உம்மை. கடலின் வளமானது என்றும் குன்றாது. ஆனால், அதுவே குன்றும் நிலை ஏற்படும் என்னும் பொருள் இங்கு விளக்கப்பட்டுள்ளது.

ஈ) சிறப்பொடு பூசனை செல்லாது வானம்

வறக்குமேல் வானோர்க்கு மீண்டு. (குறள் 18)

வானோர்க்கு மீண்டு = வானோர்க்கு + உம் + ஈண்டு (உயர்வுச் சிறப்பு)

விளக்கம்: மழை நின்றால், உலகத்தில் வானவர்க்கான திருவிழாக்களும் சிறப்புப் பூசனையும் நிகழாது. வானோர்கள் என்பவர் தேவர்கள். இவர்களுக்குப் பூசனைகள் செய்வதை மாந்தர்கள் எந்தச் சூழலிலும் நிறுத்தமாட்டார்கள். ஆனால், அத்துணைச் சிறப்புக்குரிய வானோர்க்கும், உலகில் மழை பெய்யாவிடில் பூசனைகள் நிகழாது என்று கூறப்படும் இடத்தில் வானோரின் சிறப்பும் மழையின் வலிமையும் உயர்த்திக் கூறப்பட்டுள்ளன. எனவே, இஃது உயர்வுச்சிறப்பு உம்மை.

உ) தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்

வானம் வழங்கா தெனின். (குறள் 19)

தானந்தவமிரண்டும் = தானம் + தவம் + இரண்டு + உம் (முற்றும்மை)

விளக்கம்: இங்கு, தானம் தவம் என்னும் இரண்டையும் உள்ளடக்கிக் கூறுவதால் இது முற்றும்மையாகும்.

ஊ) நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்

வானின் றமையா தொழுக்கு. (குறள் 20)

யார்யார்க்கும் = யார் + யார்க்கு + உம் (முற்றும்மை)

விளக்கம்: யார்யார்க்கும் என்பதில் உயர்திணை அஃறிணை உயிர்கள் உள்ளடக்கிக் கூறப்படுவதால் இது முற்றும்மையாகும்.

எ) உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்

வரனென்னும் வைப்போற்கோர் வித்து. (குறள் 24)

ஓரைந்தும் = ஓர் + ஐந்து + உம்(முற்றும்மை)

விளக்கம்: ஐந்தும் என்பது மெய், வாய், கண், மூக்கு, செவி என ஐம்புலன்களையும் உள்ளடக்கிக் கூறப்படுவதால் இது முற்றும்மையாகும்.

ஏ) அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்

செந்தண்மை பூண்டொழுக லான்.

எவ்வுயிர்க்கு + உம்(முற்றும்மை) + செந்தண்மை

விளக்கம்: எவ்வுயிர்க்கும் என்பதில் உயர்திணை, அஃறிணை உயிர்கள் உள்ளடக்கிக் கூறப்படுவதால் இது முற்றும்மையாகும்.

நிறைவுரை

குறிப்பால் பொருள் உணர்த்தும் இத்தகு தனியிடைச் சொல், திருக்குறளில் பொருளுடைய தொடர்களை உருவாக்குவதற்குத் துணை நிற்கின்றது. இவ்வாய்வில், உம் இடைச்சொல்லுக்குத் தொல்காப்பியர் குறிப்பிட்ட 8 பொருள்களில் 2 பொருள்கள் மட்டுமே முதல் 30 குறள்களில் கண்டறியப்பட்டன. எட்டுக் குறள்களில் ஆறு குறள்களில் சேர்ந்து வரும் உம் இடைச்சொல் முற்றும்மை என்னும் பொருளிலும் இதர இரு குறள்களில் சேர்ந்து வரும் உம் இடைச்சொல் சிறப்பும்மை என்கிற பொருளிலும் வழங்குவதாக ஆய்வின் முடிவில் கண்டறியப்பட்டுள்ளன.

துணைநூற்பட்டியல்

Navin G Ganeson, Sharan Suklam Ahthma Lingam. The usage of Oṭu, Ōṭu Urupu found in Thirukkural. (2023). Indian Journal of Tamil, 4(1) 13-19. https://doi.org/10.54392/ijot231

Nuhman, M.A. (1999). Aṭippaṭait tamil̠ ilakkaṇam. Sri Lanka. Vasagar Sangam.

Nannan, M. (2012). Tirukkuṟaḷ mūlamum viḷakka uraiyum. Chennai: Yegam Pathippagam.

Rajagopal, K. 1962. Ilakkaṇa viḷakkam (colliyal). Chennai: Star Publication.

Saravanan, S. Tirukkuṟaḷil taṉmai vikutikaḷ - mol̠iyiyal pārvai. (2015). International Journal of Linguistics and Computational Applications (IJLCA), 2(3), 73 – 77.

Seeni Naina Mohamed, S. (2013). Nalla tamil̠ ilakkaṇam. Pulau Pinang: Ungalkural Enterprise.

Thamizhannal, R. (2008). Tolkāppiyam mūlamum karutturaiyum. Sinthamani Pathippagam.

Tharmalingam, T. New Parables in Thirukkural. (2023). Shanlax International Journal of Tamil Research, 8(2), 108 – 114.

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

உரையாசிரியர்களின் உரைத்திறன் மீதான திறனாய்வு குறித்த வாசிப்புக் கோட்பாடு

Readers respond theory on Criticism of Urayasiriyars' Explicit Skill

சீ.சரவணஜோதி சீத்தாராமன் / Saravanajothi seetharaman[1]
மனோன்மணி தேவி அண்ணாமலை / Manonmani Devi M. A. R. Annamalai[2]

[1]Assistant Professor, Department of Tamil, Thiagarajar College, Madurai, India.
[2]Associate Pofessor, Faculty of Languages and Communication, Sultan Idris Education University

*Corresponding Author's Email: saravanajothi_tam@tcarts.in

ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் உரையாசிரியர்களின் உரைகள் மீது எழக்கூடிய விமர்சனங்கள் புதிய நோக்கில் வாசிக்கப்பட வேண்டியவை. பழந்தமிழ் இலக்கண, இலக்கிய உரையாசிரிகளின் ஆய்வுத்திறனை விமர்சிப்பதாக மு.வை.அரவிந்தன் எழுதிய உரையாசிரியர் என்ற நூல் அமைகிறது. உரையாசிரியர்கள் என்பர்கள் திறனாய்வாளர்கள். மூல நூலின் கருத்துக்களைத் திறனறிந்து எடுத்துரைக்கும் உரையாசிரிர்களின் உரைகளைத் திறனாய்கின்ற போக்கு 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆய்வாக நிகழ்த்தப்பட்டது. இத்தகைய ஆய்வுகளை வாசிப்புக் கோட்பாட்டின் வழி எடுத்துரைக்கும்போது புதிய கற்றல் நெறிகளைக் கண்டறிய முடிகிறது. இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அடிப்படையில் ஒப்பீடு மற்றும் விளக்கமுறை அணுகுமுறை கையளாப்பட்டுள்ளன. இவ்வாய்வில் உரையாசிரியர்களின் திறனாய்வு முறையும், திறனாய்வு செய்யப்பட்ட காலத்தின் அரசியல் போக்கும், சமகால வாசிப்பு முறையும் உரைகளில் தொடர்கிறது என்பதை ஆய்வாளர் உறுதிசெய்கின்றார்.

கருச்சொற்கள்: உரையாசிரியர், திறனாய்வு, வாசிப்புக் கோட்பாடு, இலக்கண உரைகள், இலக்கிய உரைகள்

Abstract

Urayasiriyar are critics of ancient Tamil literature and grammar.The major objective of the research is reading the criticism of Urayasiriyar's Urai in new angle. The book Urayasiriyar by Mu.Aravindhan Criticise Urayasiriyar's research work on ancient Tamil Literature and Grammar. Urayasiriyars are Critics of ancient tamil era. on early of 19th century researches focused on urayasiriyar's skill of explicit the primary text. When we approach this kind of researches through readers respond theory,we can find the new of learning methods. Design of the study is qualitative method and the methods of Descriptive and Comparative analysis has also been used. Researcher concluded in this research that research style of Urayasiriyars,the background of the era, contemporary reading style were still continues in Tamil.

Keywords: Urayasiriyar, Criticism , Readers respond theory, Tamil Grammar, Tamil literature.

முன்னுரை

‘வாசிப்பு’ உற்பத்தி முறையில் வளம் பெற்ற சொல்லாக்கம். உற்பத்தி முறை என்பது சமூக உற்பத்தியா? அரசியல் உற்பத்தியா? என்ற வினா எழக்கூடும். வாசிப்புக்கும் உற்பத்திக்கும் என்ன உறவு! என்பதான பல வினாக்கள் எழக்கூடும். எழவேண்டும். இலக்கியங்களில் பலவகையான கோட்பாடுகள் உற்பத்தியாகின்றன. நவீனகால இலக்கிய உற்பத்தி முறையில் வாசிப்பு கோட்பாடு (Reddar Theory) கருத்துருவாக்கம் பெற்று வருகிறது.

திறனாய்வு பற்றி மூன்று படிநிலைகளைக் குறிப்பிடுகின்றனர்.

1. படைப்பாளியை மையப்படுத்தி ஆராயும் முறை
2. படைப்பை முன்னிறுத்தி ஆராயவது
3. வாசகனை மையப்படுத்தியதாகும்.

இவ்வகையான திறனாய்வு முறைகளில் வாசிப்பை முதன்மையாகக் கொண்டு உருவாக்கம் பெற்ற திறனாய்வு முறை. ‘ழாக் தெரிதா’ வாசிப்பு முறை கருத்துக்கள் பற்றி எடுத்துரைத்தவர்களின் மேலானவர், முதன்மையானவர்.

வாசிப்பின் மூலம் ஒரு நூல், பனுல், பிரதி என்ற சொல் வழியாக படைப்பு முதன்மை பெறுகிறது. அல்லது சமூகத்தில் நிலைபெற்றிருக்கிறது என்று கூறலாம். படைப்பு நிலைபெற்றது என்றால் வாசகரின் ஏற்பைப் பெற்றது என்று அர்த்தம். இலக்கிய மரபைப் புதிய கோணத்தில் புரிந்துகொள்ள முயற்சித்தால் பல திறப்புகளை உருவாக்கலாம். இவ்வகையில் ஏற்புக் கோட்பாடு (Reception Theory) வாசிப்பின் அடிப்படையாக அமைகிறது.

ஆய்வு முன்னோடிகள்

தமிழ் நாவலர் சரிதை 17ஆம் நூற்றாண்டிலும் 1949-இல் ஔவை துரைசாமிப்பிள்ளை பதிப்பித்து வெளியிட்டார். 1921-இல் தி.த.கனகசுந்தரம்பிள்ளை வெளியிட்டார். இதைப்போல் முந்நீர்பள்ளம் பூர்ணலிங்கம் பிள்ளை தமிழ் இலக்கிய வரலாற்றை 1929-இல் ஆங்கிலத்தில் வெளிவருகிறது. இந்நூல் தமிழ் இலக்கியத்தை வகைப்படுத்தும் முறைக்கு முதன்மையானதாகும். இதுபோல் தண்டபாணி தேசிகர் எழுதிய புலவர் புராணம் போன்றவை முன்ஆய்வுகளாகக் கருதலாம்.

யாழ்ப்பாணத்துச் சபாபதி நாவலர் எழுதிய ‘திராவிடப் பிரகாசிகை’ என்னும் நூல் 1989-இல் தமிழ் இலக்கிய வரலாற்றைப் பாகுபடுத்திக் காட்டியதில் முதன்மையானதாகும். இந்நூல் பாகுபாடு ஐந்து பிரிவுகளாக இருந்தது.

1. தமிழின் தெய்வப் பழமை மரபியல்
2. இலக்கண மரபியல்
3. இலக்கிய மரபியல்
4. சாத்திர மரபியல்
5. ஒழிபியல்

இவ்வித பகுப்பு முறை மு.அருணாசலம் தமிழ் இலக்கிய வரலாறு பகுப்பு முறைக்கு அடிக்கோடிட்டது. உரையாசிரியர் நூலின் பகுப்பு முறைக்கும் இந்நூல் முன் வழிகாட்டி எனலாம். மு.வை.அரவிந்தன் தம் இயல் பகுப்பு அமைத்துக் கொண்ட முறைக்குத் திராவிடப் பிரகாசிகை அடிக்கோலிட்டது.

Saravanajothi seetharaman (2020), Ethic literature and tradition of thinnai theory என்ற கட்டுரையில், உரைகள் அரசியல் பின்புலத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளன என்பதை எடுத்துறைப்பதாக இவ்வாய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

Saravanajothi seetharaman, July 19, 2024, Usage of Panpuththogai in Kurinjippattu, என்ற கட்டுரையின் மூலம் உரையாசிரியர் திறனாய்வுத் திறன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

ஏற்புக் கோட்பாடு (RECEPTION THEORY)

“படைப்பை வாசகர்கள் ஒட்டுமொத்தமாக காலந்தோறும் எப்படியெல்லாம் வாசித்து வந்திருக்கிறார்கள் என்பதன் அடிப்படையில் அதை மதிப்பிடும் இலக்கியத் திறனாய்வு முறை. ஒரு நூல் என்பது அதை வாசகர்கள் வாசித்து அர்த்தப்படுத்திக்கொள்வதன் மூலம் உருவாகும் பொது அர்த்தங்களின் தொகை என்று கருதும் ஆய்வு முறை. வாசக எதிர்வினைக் கோட்பாட்டின் வரலாற்று ரீதியான விரிவாக்கம் இது. ஹான்ஸ் ராபர்ட் ஜாஸ் (Hans Robert Jauss) என்பவரால் 1960களில் முன்வைக்கப்பட்டது. பண்பாட்டு ஆய்வாளர் ஸ்டுவர்ட் ஹால் அவர்களால் முன்னெடுக்கப்பட்டது? (ஜெயமோகன், ஏற்புக் கோட்பாடு, December 9, 2020/ www.jeyamohan.in/106341) பண்பாட்டு ஆய்வுகளாக முன்னெடுத்த வாசிப்புமுறை. உரைகளின் மீதான திறனாய்வு செய்யப்பட்ட நூல்களை, வாசிப்பு எப்படிப்பட்ட புரிதல்களை ஏற்படுத்தும் என்பதை இவ்வாய்வில் காண முற்படலாம்.

ஒரு நூலுக்கு வாசிப்பின் அர்த்தம் புறவயமானது அகவயமானது என இரண்டாகப் பகுக்கலாம். பின் அமைப்புவாதக் கோட்பாட்டாளர்கள் புறவயமான அர்த்தம் கொள்ளப் படுகின்ற கருத்தியல்கள், ஒரு குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட சூழலில் வாசகரின் தனித்துவமான எதிர்வினையைக் கட்டமைக்கப்படுகிறது.

வாசகனின் வாசிப்பில் எதிர்வினையாக அமையும் கருத்தியல்,

1. வாசகராக பொது எதிர்ப்பை நிகழ்த்துதல்
2. வாசிப்பில் எதிர்ப்பின் விளைவுகளாக உருவாகிய
   அ. ஏமாற்றம்,
   ஆ. நிறைவு
   இ. மறுப்பு,
   ஈ. ஏற்பு
   போன்ற கூறுகளைத் தன்னகத்தைக் கொண்டிருக்கும்.
3. வாசகரின் எதிர்ப்பையும் எதிர்பார்ப்பையும் உள்வாங்கிச் செயல்படும் படைப்பின் இயல்பு.

என்பதான கருத்துக்கள் வாசிப்பில் வாசகனின் மனதளவில் ஏற்படுத்தும் எதிர்வினைகளாகும்.

உரையாசிரியர்களின் உரைகளைத் திறன் ஆய்ந்து கூறும் நூல்களின் மு.வை. அரவிந்தன் (1968) எழுதிய ‘உரையாசிரியர்’ என்ற நூல் ஆகும். இந்நூலின் வழி உரையாசிரியர்களின் திறனை ஆய்வதில் வாசகனின் ஏமாற்றம், நிறைவு, மறுப்பு, ஏற்பு போன்ற கருத்தியல்வழி விவாதமாக வாசிப்பு அமையப்பெறுகிறது.

ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்கு தேவையான நூல்கள், கட்டுரைகள், தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. ஆய்வாளர் உரையாசிரிர் நூலினையும் திறனாய்வு கோட்பாட்டினையும் குறித்து ஆய்வு செய்துள்ளார். எனவே தரவுகள் முழுமையாக சேகரிக்கப்பட்டு நிரல் படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டன.

நூல் தோற்றப் பின்புலம் வாசிப்பின் ஊடாக

பழமையும் புதுமையும் இணைதல்வேண்டும் என்ற நோக்கத்தோடு உரையாசிரியர் நூல் உருவாக்கப்பட்டது. 1968இல் உரையாசிரியர் நூல் முதற்பதிப்பு வெளிவருகிறது. இதே ஆண்டில் இந்நூல் தமிழக அரசு விருது பெறுகிறது. இவ்வாய்வு நூல் பொதுப்பகுதி, சிறப்புப் பகுதி என இரு பகுதியாக பகுத்துக் கொள்ளப்பட்டது. பொதுப்பகுதியில் உரை வளர்ந்த வரலாறு, உரையாசிரியர்கள் தந்த உரைவகைகள், உரைகளின் பொதுவியல்புகள், சிறப்புப் பகுதியில் உரையாசிரியர் பரம்பரையை, முதல், வழி, சார்பு, என்று மூன்றுவகையாகப் பகுத்துக்காட்டப்பட்டது.

உரையாசிரியர் நூல் இலக்கண உரையாசிரியர் இலக்கிய உரையாசிரியர், சமய உரையாசிரியர் என்பதாகப் பகுத்துக் காட்டுகிறார். இதற்குப் பின்னர் மு.அருணாசலம் அவர்களின் 13ஆம் நூற்றாண்டு இலக்கிய வரலாறு 1969 முதல் 1990 வரை என்று வரையறுத்துக் கூறமுடியும். பதிமூன்றாண்டு தமிழ் இலக்கிய வரலாறு முதலில் பதிப்பு செய்வது வெளிவருகிறது. இவ்விலக்கிய வரலாறு மிகவும் கவனிப்புக்குரியதாகும்.

மு.அருணாசலம் தமிழ் இலக்கிய வரலாறு. இயல் பகுப்பு பார்க்கும்போது, இலக்கிய உரையாசிரியர், இலக்கண உரையாசிரியர், சைவ இலக்கியம், வேதாந்த இலக்கியம், வைணவ இலக்கியம் என்பன பொருண்மையில் உரையாசிரியர் பற்றி விரிவாகப் பேசப்படுகிறது.

ஏமாற்றம்

வாசிப்பில் வாசகனின் பொது எதிர்நிலை ஏமாற்றத்தை ஏற்படுத்துகின்றன. நூல் வாசிப்பில் ஏற்பட்ட எதிர்நிலையில் பொருண்மை என்பது, முன்னாய்வுகள் குறிப்பிடப்படவில்லை. திராவிடப் பிரகாசிகை 1989-இல் இலக்கண மரபியல், இலக்கிய மரபியல் என்ற பகுப்பை அடிக்கோடிட்டது. 1968-இல் உருவான மு.வை. அரவிந்தன் எழுதிய உரையாசிரியர் நூலில் இதற்கான விளக்கம் இல்லை. ஆனால் 1970களில் வெளிவந்த மு.அருணாசலம் எழுதிய பதிமூன்றாம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய வரலாற்றில் இலக்கிய உரையாசிரியர், இலக்கண உரையாசிரியர் என்று பகுப்புமுறை காணப்படுகிறது. திராவிடப் பிரகாசிகை நூல் முன்ஆய்வாக மு.அருணாசலம் காட்டுகிறார்.

உரையாசிரியர் நூலை மூன்று பிரிவுகளாக பகுத்துள்ள அமைப்பிற்குப் பல இலக்கிய வரலாற்று நூல்கள் காரணம் எனலாம். கா.சு.பிள்ளை 1930-இல் எழுதிய தமிழ் இலக்கிய வரலாறு ஆய்வுப் பகுப்பிற்கு முக்கிய காரணமாக அமைகிறது. கி.வா.ஜகந்நாதன் எழுதிய சிறப்புரையில், “இவருடைய சில பகுதிகள் ஏற்க தகாதன என்று சொல்வதை எல்லாரும் உடம்படாமல் இருக்கலாம்” (மு.வை.அரவிந்தன், 1963, உரையாசிரியர், ப.25). எனவே, நூல் வாசிப்பில் ஏமாற்றம்.

நிறைவு

உரையாசிரியர் பற்றிய முதல் திறனாய்வு நூல் என்பதால் பல்வேறு புதுமையான செயல்பாடாக பல பகுதிகளை அமைத்துள்ளார். சான்றாக, இறையனார் உரை என்று எடுத்துக்கொண்டால், உரையின் வழியாக ஆய்வு செய்த முறை, இறையனார் பற்றிய மதிப்பீடு என்பன பெரும் உழைப்பில் அமைந்தது எனலாம். சான்று:

“1. பயிரக்கருத்துரைத்தல்
2. சொற்பொருள் விரித்தல்
3. தமிழ் மரபு பேணுதல்
4. இலக்கணக் குறிப்புத் தருதல்

5. பழைய பாடல்களை மேற்கோள் காட்டுதல்
6. வினா, விடை முறையில் பொருளை விளக்குதல்
7. செய்யுள் நடையில் உரைநடை
8. கருத்தைத் தெள்ளத்தெளிவாகக் கூறுதல்" (மு.வை.அரவிந்தன், 1968, உரையாசிரியர்)

என்பதான திறனாய்வு முறையை முன்வைக்கிறார். 1965, 1968 களில் ரஷ்ய இலக்கிய வாசிப்பு பெருகி இருந்த காலம். மேலை இலக்கியத் திறனாய்வு வாசிப்பு பெருகி இருந்த காலத்தில் மரபுசார்ந்த திறனாய்வு முறையை மு.வை.அரவிந்தனிடன் தெளிவாகக் காணமுடிகிறது.

இளம்பூரணர் பற்றி இவர் கூறும் மதிப்பீடு "ஆழமான தெளிந்த நீரோடை போன்றது" என்பது சிறப்புக்குரியதாகும்.

சேனாவரையர் 'பாடம் சொல்லும் ஆசிரியராக இருந்தார் என்பதும், படைத்தலைவர் குடியில் பிறந்தார் என்பதும் உரையில் காட்டும் மேற்கோள் கொண்டு கண்டுணர முடிகிறது என்பதை நிறுவுகிறார். நச்சினார்க்கினியரை' நூலறிவோடு நுண்ணறிவும் உடையவர் என்பதையும் நிறுவுகிறார்.

செ.வேங்கடராமச் செட்டியார் மு.வை.அரவிந்தனார் பற்றிக் குறிப்பிடுகையில், "உரை வேற்றுமை கண்டு நல்லனவற்றையும் அல்லனவற்றையும் சீர்தூக்கும் நோக்கம் வளர்ந்து வருகின்றத. செல்வாக்கு உடையவர்களின் சொல்லை அப்படியே ஏற்கும் நிலைமாறி, நல்லது எது, சிறந்தது எது, பொருத்தமானது எது – என்று ஆராயும் திறன் பெருகி வருகின்றது. புகழ்பெற்ற உரையாசிரியர்களின் பொருந்தாக் கருத்துக்களை மறுக்கும் துணிவு தலை தூக்கியுள்ளது. யார் சொல்கிறார்கள் என்று பார்க்கும் நிலைமாறி என்ன சொல்லுகின்றார் என்று நுணுகி நோக்கும் நிலை ஏற்பட்டு வருகின்றது" (மு. வை.அரவிந்தன், (1968) உரையாசிரியர்கள், ப.20) என்ற கருத்தின் மூலம் திடமான திறனாய்வுச்சாடலை முன்வைத்துள்ளார் என்பது புலப்படுகிறது. அக்கால செல்வாக்குப் பெற்ற உரையாசிரியர்களையும் மறுக்கும் துணிவு இவரிடம் இருந்திருக்கிறது. எடுத்துக்கொண்ட பொருண்மையில் திடமான எழுத்தை முன்வைத்திருக்கிறார்.

மறுப்பு

நூலின் இயல் பகுப்பு முக்கியமானதாகும். இந்நூல் அறிமுகம், ஆய்வு, நோக்கு என்று கட்டமைக்கப்பட்டுள்ளது. அறிமுகம் என்பது வரலாறு போன்றது. உரையின் அடிப்படைகளை எடுத்துரைப்பது.

ஆய்வு என்ற பகுதியில் பொருண்மைகளை வகைப்படுத்துகிறார். இவ்வகைப்பாட்டில் நூலாசிரியர்க்கு மிகப்பெரிய குழப்பம் இருப்பதை அறியமுடிகிறது.

1. பொருண்மைகள் அடிப்படையில் வகைப்பாடு அமையலாம்
2. ஆசிரியர்களின் கால அடிப்படையில் அமையலாம்
3. ஆண்டுகள் அடிப்படையில் ஆசிரியரும் பொருண்மைகளும் விரவி வரலாம்

ஆனால் இந்நூலைப் பொறுத்தவரையில், இலக்கண உரையாசிரியர். அடுத்து நச்சினார்க்கினியர் என்று அமைக்கப்பட்டுள்ளது. இப்பாகுபாட்டில் இலக்கண உரையாசிரியர் இலக்கிய உரையாசிரியராக இருப்பதால் பொருண்மை அடிப்படையிலும் தனிமனிதர் அடிப்படையிலும் கட்டமைப்பு செய்யப்பட்டது எனலாம்.

இந்நூலின் இயல் பகுப்பு முறையை உற்றுநோக்கும்போது, தெளிவின்மையை உணர முடிகிறது.

1. இலக்கண உரையாசிரியர், இலக்கிய உரையாசிரியர், காப்பிய உரையாசிரியர், சமயநூல் உரையாசிரியர் என்ற பாகுபாடு உள்ளன.
2. திருக்குறள் உரையாசிரியர், நன்னூல் என்ற நூல் அடிப்படையில் இயல் பகுப்பு அமைக்கப்பட்டுள்ளன.
3. நச்சினார்க்கினியர், பரிமேலழகர், சிவஞான முனிவர் என்று உரையாசிரியர் பெயர் கொண்டு வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
4. இலக்கண உரையாசிரியர், இலக்கிய உரையாசிரியர் என்று இரண்டு முறை வந்த தலைப்பையை எடுத்துரைக்கப்படுகிறது. குறிப்பாக ஒரே பெயர் இரண்டு முறை தொடர்ச்சியா வராமல் இடையிடையே மாறி வந்திருப்பது குழப்ப நிலையைக் காட்டுகிறது.

இவ்வியல் பகுப்பில் காலம், பொருண்மை தனிமனிதர் என்ற கலப்பு நடையில் நூல் வடிவமைப்பு இருப்பதாக உள்ளது. நூலாக்க முறையில் இம் அமைப்பு முறை மறுத்துரைக்க வேண்டியதில்லை.

ஏற்பு

இந்நூல் 1968-இல் பதிப்பித்து வெளிவருகிறது. இக்கால அரசியல் நிலைப்பாடு தமிழகத்திலும் இந்தியாவிலும் புத்தொளி பெற்றதாக இருந்தது. இந்தியாவில் பிரதமராக இந்திராகாந்தி அவர்கள் 1966-இல் பதவி வகித்தார். துடிப்பான வீரம் செறிந்த பிரதமர். இதே காலகட்டத்தில் தமிழகத்தில் காங்கிரஸ் வீழ்ச்சியுற்று திராவிட கட்சி எழுச்சி பெறுகிறது.

1968-இல் தமிழ்நாட்டில் திராவிடக் கருத்தியல் இலக்கியங்களுக்குள் உள் புக ஆரம்பிக்கிறது. இச்சுழலில் பக்திக்கும் திராவிட அரசியலுக்கும் இடையே சொல் புனைவாக்கங்கள் பெறுகின்றன. இறை அடியவர்களைத் திருத்தொண்டர் என்று அழைத்தனர். திராவிட அரசியலில் கட்சி உறுப்பினர்களைத் தொண்டர்கள் என்று அழைத்தனர்.

உரையாசிரியர்களைப் பற்றி மதிப்பிடும்போது தமிழ்மீட்சி இயக்கம், தொண்டர் திருக்கூட்டம், தமிழ்க்காவலர் என்று தலைப்புகளின் வழி சமகால திராவிட அரசியல் கருத்தியல் உருப்பெற்றது எனலாம். தொண்டர் திருக்கூட்டம் என்ற சொல்லின் மூலம் திராவிட சிந்தனை மரபை உள்வாங்கியுள்ளார் என்பதை உரணலாம்.

முடிவுரை

வாசிப்பு முறையென்பது ரோலன் பார்த்தின் ஆசிரியன் இறந்துவிட்டான் என்பதும், டெரிடாவின் கட்டவிழ்ப்பும் சசூரின் மொழி கிறியடையாளங்களாகவும் இயங்குகிறது என்பதான பொருண்மைகள் முன்வைக்கப்பட்டு வாசிக்கப்பட்டன. இலக்கிய உணர்திறன் இல்லாதவர்களிடம் சிக்கிம் இலக்கியப் பிரதி அவர்களது வாசிப்பில் மூச்சுத் திணறி இறந்துவிடுகிறது என்பார்கள். அதைப்போல் உணர்திறன் கொண்ட வாசகனிடம் கட்டுண்ட பிரதி மறுபுனைவாக்கம் பெறுகிறது என்பார்கள். இவ்வகையில், உரையாசிரியர்கள் என்ற நூல் தட்டையான வாசிப்பின் வாயிலாக இயல்பாட்டில் உள்ள சிக்கல்கள் மாற்றியமைக்கப்படவில்லை. பல பதிப்புக்கள் வந்தும் நூலாசிரியர் மூன்று பதிப்புகளுக்கு முன்னுரை கொடுத்தும் இயல்பகுப்பில் கவனம் செலுத்தப்படவில்லை.

நூலாசிரியரின் சமகால அரசியல் போக்கிற்கு ஏற்ப சொல்லாடல்களும் ஆவு முடிவுகளும் அமைக்கப்பட்டிருந்தன.

துணைநூற்பட்டியல்

Aravinthan, mu. Vai., (2008). (II Edition), Uraiyaasiriyarkal, Manivaasakar pathippagam, Chennai.

Arunaachalam, mu., (1970). Tamil Ilakkiya varalaru pathimunraam nutraandu, Thi Parkar, Chennai.

Dhuraisamibillai., Avai., S. (1996). Puranaanuru, Kalaga veliyidu, Chennai

Ilangumaran, Ra., (1977)., Uraiyaasiriyarkal kanda sorporul nunmai vilakkam,(A serial), Thirunelveli thenninthiya chaivasiththantha nurpathippugalakam, Chennai.

Ilampuranar,Tolkappiyam porulathikaram, (1971). Kalaga veliyidu, Chennai.

Ilangumaran, Ra., (2016)., (sixth edition), Ilakkana varalaru, Manivaasakar pathippagam, Chennai.

Kirusnamoorthi, sa., (1985)., Urai kazhangiyam, Manivaasakar pathippagam, Chennai.

Mathaiyan, pe., (2004) uraiyiyal, Pavai pabulication, Chennai.

Jayamogan. Readers respond theory, December.9, 2020/www.jeyamohan.in

Saravanajothi, S. (2020), Ethic literature and tradition of thinnai theory, Journal Of Tamil Studies Vo 1 No 1., https://ejournal.upsi.edu.my/index.php/ JTS/issue/view/321

Saravanajothi seetharaman, July 19, 2024, Usage of Panpuththogai in Kurinjippattu, IJCRT2407544 International Journal of Creative Research Thoughts (IJCRT) www. ijcrt.org

மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

உயர்திணைப் பெயர்களில் வலிமிகும் இடங்களும் உண்டு – நாலடியார்வழி ஓர் ஆய்வு

There are also valimikum places in Uyarthinai Nouns – A study on Naaladiyar

Seeniwasan Sandran / சீனிவாசன் சந்திரன்[1]
Manonmani Devi M.A.R Annamalai / மனோன்மனி தேவி அண்ணாமலை[2*]

[1]Postgraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia.
[2]Associate Professor, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia.

*Corresponding Author's Email: manonmanidevi@fbk.upsi.edu.my

ஆய்வுச் சாரம்

இந்த ஆய்வு நாலடியாரில் உயர்திணைப் பெயர்ச்சொற்களின் புணர்ச்சி முறைகளை ஆராய்கிறது. உயர்திணைப் பெயர்ச்சொற்கள் வேற்றுமை விகுதிகளுடன் பாடல்களில் புணர்ந்து வரும்போது, இரண்டு வேறுபட்ட பொருள்களைத் தந்து, பொருள் விளக்கத்தில் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. புலவர்கள் இலக்கணத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட புணர்ச்சி விதிகளைப் பின்பற்றி, குறிப்பிட்ட சிக்கல்களை சரியான பொருள் விளக்கத்துடன் விளக்குகின்றனர். யாப்பின் அமைப்பையும் பாடலின் பொருளையும் முறையாக வைத்திருக்க, புலவர்கள் தங்கள் முன்னோர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றப்பட்ட புணர்ச்சி விதிகளைக் கடைப்பிடிக்கின்றனர். உயர்திணைப் பெயர்கள் இயல்பு புணர்ச்சி விதியின் கீழ் கருதப்படுகின்றன, ஆனால் விதிவிலக்காக, பழைய இலக்கியங்களில், ஒரு சொல்லுக்கு குறிப்பிட்ட பொருளை உருவாக்க உயர்திணைப் பெயர்ப் புணர்ச்சிகளில் வலிமிகும் விதி காணப்படுகிறது. புலவர்கள் சொற்களின் பொருளை நிர்ணயிக்க நாலடியாரில் இந்த விதியைக் கையாண்டுள்ளனர் என்பது தெரிய வருகிறது. எனவே, இந்த நூலக ஆய்வு நாலடியாரின் 400 பாடல்களை உள்ளடக்கியது. நாலடியாரின் 12 பாடல்களில் 11 பாடல்களில் உயர்திணைப் பெயர்ப் புணர்ச்சிகளில் வலிமிகும் விதி இருப்பதை இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது. இந்தப் புணர்ச்சி விதிகளின் அடிப்படையில் தமிழ் இலக்கியத்தில் ஆய்வு செய்யப்போகும் பிற ஆய்வாளர்களுக்கு இந்த ஆய்வு ஒரு வழிகாட்டியாகவும் செயல்படுகிறது.

கருச்சொற்கள்: உயர்திணைப் பெயர்கள், நாலடியார், வலிமிகுதல், விதிவிலக்கு

Abstract

This study explores the combination of Uyarthinai Nouns in Naaladiyar. The Uyarthinai Nouns are affixed with the case elliptical clauses in poems, bringing out two different meanings and creating confusion in the definition. Poets circumvent this issue by accepting the combination theories in grammar and applying them to explain the particular issues with the correct definition they tend to deliver. Poets keep to the theories of combinations which are accepted and followed by their ancestors to keep the structure of prosody and definition of the poem in order. Uyarthinai Nouns are considered to be under the Iyalpu Combination theory, but, with an exception, in ancient literature, valimikum theory has been found among the rational noun combinations to create a certain definition for a word. It is known that poets have handled this theory in Naaladiyar to determine the definition of the words. Hence, this library research includes 400 poems by Naaladiyar. This study found the presence of valimikum theory in the rational noun combinations in 11 out of 12 poetries of Naaladiyar. This study also serves as a demonstration to other research scholars who are going to conduct research on Tamil literature based on these combination theories.

Keywords: Uyarthinai Nouns, Naladiyar, Valimikum, exception

முன்னுரை

பண்டைப் புலவர்கள் தாங்கள் இயற்றிய செய்யுள்களில் உயர்தகு ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தனர். புலவர்கள் தத்தம் செய்யுள்களில் புலப்படுத்த விரும்பும் கருத்தின் பொருள் கெடாமலும், அதே சமயம் யாப்பின் தன்மை சிதையாமலும் இருக்கத் தங்கள் புலமையால் ஆழ்ந்த இலக்கண விதிகளைக் கையாண்டனர். செய்யுளில் சொற்களை யாத்திடும்போது, உரைநடைபோல் தெளிவாக விரித்து எழுத இயலா. இதனால், செய்யுளின் தொடர்களில் இருபொருள் தோன்றிப் பொருட்குழப்பம் ஏற்படும். ஆதலால், பொருட்குழப்பம் தவிர்க்கச் சொற்புணர்ச்சியில் விதிவிலக்காக உள்ள சிறப்பு விதியைப் புலவர்கள் கையாண்டு செய்யுளின் தளையும் ஓசையும் கெடாமல் காத்தனர். அவ்வாறு, சான்றோர்களால் விதிவிலக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட புணர்ச்சியில் உயர்திணைப் பெயர்களுக்குச் சிறப்பிடமுண்டு. அவ்வகையில், சமண முனிவர்கள் தாங்கள் இயற்றிய நாலடியாரின் செய்யுள்களில் உயர்திணைப் பெயர்களை வலிமிகுத்துப் பல்லிடங்களில் எழுதியுள்ளனர். இவ்வாய்வானது, விதிவிலக்காய் உயர்திணைப் பெயர்கள் வலிமிகும் இடங்களும் உண்டு என்பதனை நாலடியார்வழி கண்டறிந்து நிறுவுதலே இவ்வாய்வின் நோக்கமாகும்.

சொற்புணர்ச்சியில் உயர்திணைப் பெயர்கள்

உயர்திணைப் பெயர் இயல்பு புணர்ச்சிக்கே உரியது; திரிபு புணர்ச்சிக்கு உரியதன்றெனத் தொல்காப்பியர்,

"உயிரீ றாகிய உயர்திணைப் பெயரும்

புள்ளி இறுதி உயர்திணைப் பெயரும்

எல்லா வழியும் இயல்பென மொழிப"

(தொல்காப்பியம் - தொகை மரபு - நூற்பா 153)

என்னும் நூற்பா வழி இலக்கணம் வகுக்கிறார். ஆயினும், பெயர்வினைத் தொடர்களில் இயல்பாகும் இ, ஐ, ய், ர், ழ் ஈறுகள், இரு பொருள் தரும் ஒரே தொடரில் மட்டும் பொருள் வேறுபாடு காட்டுவதற்காக வலிமிகுத்தோ மெல்லின மெய்யை வல்லினமாகத் திரித்தோ எழுதப்படுகிறது(சீனி நைனா முகம்மது, 2013). மேலும், இந்த ஈற்றுடன் வரும் பெயர்வினைத் தொடர், இருபொருள் தரும் தொடரன்று என்றால் வலிமிகாது என உறுதி கொள்ளலாம்(சீனி நைனா முகம்மது, 2013). செய்யுள் தொடரில் இருபொருள் தோன்ற வேற்றுமை உருபுகள் காரணமாகின்றன. இவை வேற்றுமைத் தொகை வடிவத்தில் செயற்படுகின்றன. தொடரில் பொருட்குழப்பம் ஏற்படுத்தும் இரு வேற்றுமையுருபுகளில், கூற விழையும் பொருளை உறுதி செய்ய அந்தக் குறிப்பிட்ட வேற்றுமையுருபின் அடையாளமாக வலிமிகுத்து எழுதப்படுகிறது. செய்யுளுக்குரிய இந்தப் புணர்ச்சிமுறை புலவர்களின் ஓர் உத்தியாய்ச் செய்யுளில் கையாளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஆய்வுச் சிக்கல்

இச்சிறப்பு விதிகளை அறிந்திருப்பது தமிழறிவுக்கு இன்றியமையாத ஒன்றாகும். திருக்குறளிலும் சிலப்பதிகாரத்திலும் புலவர்கள் கையாண்ட இவ்வுத்தியை இன்று கவிதை எழுதுவோர் கையாள்வதில்லை. பெரும்பான்மையாக, தொகைகளை விரித்தே எழுதுகின்றனர். ஆயினும், இவற்றை அறிந்திருப்பது இலக்கியம் பயில்வதற்கும் நேரடியாகப் பொருள் புரியவும் பெரிதும் உதவுமென இலக்கண ஆய்வாளர் சீனி நைனா முகம்மது(2004) விளக்கமளிக்கிறார்.

ஆய்வு நெறிமுறை

இது நாலடியாரை ஆய்வுப் பொருளாக உட்படுத்தி மேற்கொள்ளப்பட்ட நூலக ஆய்வாகும். இவ்வாய்வுக்கு, நாலடியாரில் உள்ள 400 செய்யுள்களும் உட்படுத்தப்பட்டுள்ளன. செய்யுள்களில் கண்டறிந்த தரவுகள் இலக்கணச் சொற்புணர்ச்சி விதிகளோடு விளக்கப்பட்டுப் பண்புசார் முறையில் மேற்கொள்ளப்பட்டதாகும்.

ஆய்வுக் கண்டுபிடிப்பு

எழுவாய்த் தொடரா இரண்டன் தொகையா என ஐயம் எழும் இடத்தில், அஃது எழுவாய்த் தொடராயின் வலிமிகாது; இரண்டன் தொகையாயின் வலிமிகும்(சீனி நைனா முகம்மது, 2004).

எனக்குத்தா யாகியா ளென்னையீங் கிட்டுத்

தனக்குத்தாய் நாடியே சென்றா - டனக்குத்தா

யாகி யவளு மதுவானால் தாய்த்தாய்க்கொண்

டேகு மளித்திவ் வுலகு.

(நாலடியார் - துறவறவியல் - இளமை நிலையாமை - செய்யுள் 15)

சொற்புணர்ச்சி: தாய் + தாய்

தாய்தாய் – தாய் தாம்தேடுதல் (எழுவாய் வேற்றுமையுருபு)

தாய்**த்**தாய் – தாயைத் தேடுதல் (இரண்டன் வேற்றுமையுருபு)

சொற்பொருள் விளக்கம்: இத்தொடரில் முதல் தாய், அன்னையைக் குறிக்கின்றது. இரண்டாம் தாய், தா என்பதன் அடியாகத் தோன்றிய இறந்தகால வினையெச்சம் ஆகும். தா என்னும் வினையினின்று தாவு, தாய் என்னும் வினையெச்சங்கள் தோன்றும். தாவுதல் – தேடுதல். (சுப்பிரமணியப் பிள்ளை et al.,1982)

கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்

பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டும் - மணங்கொண்டீண்

'டுண்டுண்டுண்' டென்னு முணர்வினாற் சாற்றுமே

'டொண்டொண்டொ ணென்னும் பறை.

(நாலடியார் - துறவறவியல் - யாக்கை நிலையாமை - செய்யுள் 25)

சொற்புணர்ச்சி: காட்டு + உய்ப்பார் + கண்டும்

உய்ப்பார் கண்டும் – உய்ப்பார் தாம்கண்டும் (எழுவாய் வேற்றுமையுருபு)

உய்ப்பார்**க்** கண்டும் – உய்ப்பாரைக் கண்டும் (இரண்டன் வேற்றுமையுருபு)

காதலார் சொல்லுங் கடுஞ்சொ லுவந்துரைக்கு

மேதிலா ரின்சொலிற் றீதாமோ-போதெலா

மாதர்வண் டார்க்கு மலிகடற் றண்சேர்ப்ப

வாவ தறிவார்ப் பெறின்.

(நாலடியார் - இல்லறவியல் - பொறை உடைமை - செய்யுள் 73)

சொற்புணர்ச்சி: சேர்ப்ப + ஆவது + அறிவார் + பெறின்

அறிவார் பெறின் – அறிவார் தாம்பெறின் (எழுவாய் வேற்றுமையுருபு)

அறிவார்**ப்** பெறின் – அறிவாரைப் பெறின் (இரண்டன் வேற்றுமையுருபு)

அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்

பிறன்றார நச்சுவார்ச் சேரா - பிறன்றார

நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்

றச்சத்தோ டிந்நாற் பொருள்.

(நாலடியார் - இல்லறவியல் - பிறர்மனை நயவாமை - செய்யுள் 82)

சொற்புணர்ச்சி : நச்சுவார் + சேரா

நச்சுவார் சேரா – நச்சுவார் தாம்சேரா (எழுவாய் வேற்றுமையுருபு)

நச்சுவார்**ச்** சேரா – நச்சுவாரைச் சேரா (இரண்டன் வேற்றுமையுருபு)

சொற்புணர்ச்சி : நச்சுவார் + சேரும்

நச்சுவார் சேரும் – நச்சுவார் தாம்சேரும் (எழுவாய் வேற்றுமையுருபு)

நச்சுவார்**ச்** சேரும் – நச்சுவாரைச் சேரும் (இரண்டன் வேற்றுமையுருபு)

நெருப்பழற் சேர்ந்தக்கா னெய்போல் வதூஉ

மெரிப்பச்சுட் டெவ்வநோ யாக்கும் - பரப்பக்

கொடுவினைய ராகுவர் கோடாருங் கோடிக்

கடுவினைய ராகியார்ச் சார்ந்து.

(நாலடியார் - இல்லறவியல் - தீவினை அச்சம் - செய்யுள் 124)

சொற்புணர்ச்சி: கடுவினையர் + ஆகியார் + சார்ந்து

ஆகியார் சார்ந்து – ஆகியார் தாம்சார்ந்து (எழுவாய் வேற்றுமையுருபு)

ஆகியார்**ச்** சார்ந்து – ஆகியாரைச் சார்ந்து (இரண்டன் வேற்றுமையுருபு)

அடைந்தார்ப் பிரிவு மரும்பிணியுங் கேடும்
முடங்குடம்பு கொண்டார்க் குறலாற் - றொடங்கிப்
பிறப்பின்னா தென்றுணரும் பேரறிவி னாரை
யுறப்புணர்க வம்மாவென் னெஞ்சு.

(நாலடியார் - அரசியல் - நல்லினம் சேர்தல் - செய்யுள் 173)

சொற்புணர்ச்சி: அடைந்தார் + பிரிவு

அடைந்தார் பிரிவும் – அடைந்தார் தாம்பிரிதல் (எழுவாய் வேற்றுமையுருபு)

அடைந்தார்**ப்** பிரிவும் – அடைந்தாரைப் பிரிதல் (இரண்டன் வேற்றுமையுருபு)

மரீஇப் பலரோடு பன்னாள் முயங்கிப்
பொரீஇப் பொருட்டக்கார்க் கோடலே வேண்டும்
பரீஇ யுயிர்செகுக்கும் பாம்பொடு மின்னா
மரிஇஇப் பின்னைப் பிரிவு.

(நாலடியார் - நட்பியல் - நட்பு ஆராய்தல் - செய்யுள் 220)

சொற்புணர்ச்சி: பொருள் + தக்கார் + கோடலே

தக்கார் கோடல் – தக்கார் தாம்கோடல் (எழுவாய் வேற்றுமையுருபு)

தக்கார்**க்** கோடல் – தக்காரைக் கோடல் (இரண்டன் வேற்றுமையுருபு)

நுண்ணுணர்வி னாரோடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்றா னுண்ணூ
லுணர்வில ராகிய வூதிய மில்லார்ப்
புணர்ந்த நிரயத்து ளொன்று.

(நாலடியார் - நட்பியல் - கூடா நட்பு - செய்யுள் 233)

சொற்புணர்ச்சி: ஊதியம் + இல்லார் + புணர்தல்

இல்லார் புணர்தல் – இல்லார் தாம்புணர்தல் (எழுவாய் வேற்றுமையுருபு)

இல்லார்**ப்** புணர்தல் – இல்லாரைப் புணர்தல் (இரண்டன் வேற்றுமையுருபு)

சொற்பொருள் விளக்கம்: புணர்தல் – சேர்தல் (சுப்பிரமணியப் பிள்ளை, மாணிக்கவாசகம் பிள்ளை, சுப்பிரமணியம், 1982)

என்னேமற் றிவ்வுடம்பு பெற்று மறநினையார்
கொன்னே கழிப்பர்தம் வாழ்நாளை - யன்னோ
வளவிறந்த காதற்ற மாருயி ரன்னார்க்

கொளவிழைக்கும் கூற்றமுங் கண்டு.

(நாலடியார் - பகைவியல் - புல்லறிவாண்மை - செய்யுள் 330)

சொற்புணர்ச்சி: அன்னார் + கொள + இழைக்கும்

அன்னார் கொளவிழைக்கும் – அன்னார் தாம்கொள விழைக்கும் (எழுவாய் வேற்றுமையுருபு)

அன்னார்**க்** கொளவிழைக்கும் – அன்னாரைக் கொள விழைக்கும் (இரண்டன் வேற்றுமையுருபு)

சொற்பொருள் விளக்கம்: கொள – கொண்டு போகுதல், இழைக்கும் – முயலுதல் (வேதகிரி முதலியார், 1924)

தளிர்மேலே நிற்பினுந் தட்டாமற் செல்லா

உளிநீரர் மாதோ கயவர்; - அளிநீரார்க்

கென்னானுஞ் செய்யார் எனைத்தானுஞ் செய்பவே

இன்னாங்கு செய்வார்ப் பெறின்.

(நாலடியார் - பகைவியல் - கயமை - செய்யுள் 355)

சொற்புணர்ச்சி: செய்வார் + பெறின்

செய்வார் பெறின் – செய்வார் தாம்பெறின் (எழுவாய் வேற்றுமையுருபு)

செய்வார்**ப்** பெறின் – செய்வாரைப் பெறின் (இரண்டன் வேற்றுமையுருபு)

கருங்கொள்ளும் செங்கொள்ளும் தூணிப் பதக்கென்று

றொருங்கொப்பக் கொண்டானா மூர - னொருங்கொவ்வா

நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்ப னீராடா

தென்னையுந் தோய வரும்.

(நாலடியார் - இன்பவியல் - கற்புடை மகளிர் - செய்யுள் 387)

சொற்புணர்ச்சி: நல் + நுதலார் + தோய்ந்த

நன்னுதலார் தோய்ந்த – நன்னுதலார் தாம்தோய்ந்த (எழுவாய் வேற்றுமையுருபு)

நன்னுதலார்**த்** தோய்ந்த – நன்னுதலாரைத் தோய்ந்த (இரண்டன் வேற்றுமையுருபு)

சொற்பொருள் விளக்கம்: தோய்ந்த – சேர்ந்த (வேதகிரி முதலியார், 1924)

முடிவுரை

நாலடியாரில், பதினொரு செய்யுள்களில் உள்ள பன்னிரெண்டு இடங்களில் பொருட்குழப்பத்தை நீக்க உயர்திணைப் பெயர்கள் வலிமிகுத்து எழுதப்பட்டுள்ளன என்பது இவ்வாய்வின் வழி சான்றுகளுடன் நிறுவப்படுகின்றன. ஓரிடத்தில் மட்டும் யகர மெய்யீற்றுப் பெயர்வினைத் தொடரிலும் பதினொரு இடங்களில் ரகர மெய்யீற்றுப் பெயர்வினைத் தொடரிலும் உயர்திணைப் பெயர்கள் வலிமிகுத்து எழுதப்பட்டுள்ளன. பண்டைத் தமிழ் இலக்கணம் உயர்ந்த இலக்கியக் கருத்துகளையும் ஆழ்ந்த இலக்கண ஒழுங்கினையும் கொண்டுள்ளன என்னும் மெய்யினை நாலடியார் புலப்படுத்துகிறது. ஆதலால், தமிழ்மொழியில் சிறப்பிடம் கொண்ட இவ்விலக்கண விதிவிலக்கை ஆய்வாளர்கள் அறிந்திருப்பது இன்றியமையாதது மட்டுமில்லாமல் இதனை முயன்று பயின்று இலக்கியத்தில் பயன்படுத்துதல் என்பது மரபினை நிலைக்க வழி வகுக்கும்.

துணைநூற்பட்டியல்

Kalathur Vedagiri Mudaliar. (1924). nālaṭiyār. Chennai: Puumagalvilaasa Accukkuudam.

Madurai Mudaliyar. (1988). nālaṭiyār. Chennai: Mullai nilaiyam.

Puliyur Kesigan, K. (2010). Camaṇa muṉivarkaḷ iyaṟṟiya nālaṭiyār teḷivurai. Chennai: Sarratha Pathippagam.

Seeni Naina Mohamed, S. (2004). Uṅkaḷ kural. Pulau Pinang: Ungalkural Enterprise.

Seeni Naina Mohamed, S. (2013). Nalla tamiḻ ilakkaṇam. Pulau Pinang: Ungalkural Enterprise.

Seeni Naina Mohamed, S. (2013). Putiya tamiḻppuṇarcci vitikaḷ. Pulau Pinang: Ungalkural Enterprise.

Subramanya Pillai, K ., Manikavasagam Pillai., & Subramaniyam. (1982). Nālaṭiyār teḷivurai. Tirunelveli: Tamilnadu Maanilam Thamiz Sangam.

Sundara Shanmuganar, S. (1970). Nālaṭiyār nayavurai. Puducherry: Puduvai Painthamil Pathippagam.